# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

## C.C. No. 12-2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | கல்வி Cross Continuation | Date : | 11.11.2025 |
| Husband Name | : | கனகராஜன் | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. (பிரிவு 355 BNSSன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடரச்சி :-**

எதிரிக்கு நான் கொடுத்த 12.03.2024 தேதியிட்ட அறிவிப்பில் காசோலை பற்றி எந்த தகவலையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு காசோலை கொடுத்திருந்தால் நான் அது பற்றிய தகவலை மேற்படி அறிவிப்பிலேயே சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த 2 அறிவிப்புகளுமே ஒரே மாதத்தில் கொடுக்கபட்டது என்றால் சரிதான். எதிரி எனக்கு Security க்காக கொடுத்த காசைோயை வைத்து அவர் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய தொகை முழுவதையும் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.